விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 30 துல் ஹஃதா: பிறை: 19 இதழ்: 121
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-06-1990

## புலிகள் - ஹமீத் நாளை மட்டுநகர் விஜயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்புப் பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நீதியமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத்தும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களும் நாளை வியாழக்கிழமை மட்டக்களப்பு செல்லவுள்ளனர்.

மட்டக்களப்புச் சம்பவங்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்டுள்ள அமைதி பேணும் நடவடிக்கைகளின்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பு: சர்வஜன வாக்கெடுப்பு ஜனவரி 19வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்துஇணைந்திருக்க வேண்டுமா? அல்லது தனித் தனியாக இயங்கவிடுவதா என்பதனை முடிவுசெய்வதற்காக நடாத்த நிர்ணயிக்கப்பட்டிருந்த தேர்தல் வாக்கெடுப்புத் திகதி மீண்டும் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

# சகல மோதல்களையும் நிறுத்தி புலிகள் - அரச படைகள் இன்று நண்பகலுக்குள் யுத்தநிறுத்தம்

## 3 மணிநேர பேச்சுவார்த்தையில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

**நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இன்று நண்பகல் 12 மணிக்குள் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் யுத்தநிறுத்தம் கொண்டு வருவதென முடிவுசெய்யப்பட்டது.**

**நேற்றுக் காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை சுமார் 3 மணித்தியாலங்கள் வரை நல்லூரில் இச்சந்திப்பு நடைபெற்றது.**

மோதல்களுக்கோ சர்ச்சைகளுக்கோ இடமளிக்கக்கூடிய சகல சூழ்நிலைகளையும் தவிர்ப்பதற்கு இருசாராரும் சமாதானமான சகல முயற்சிகளையும் எடுப்பதெனவும் இணக்கம் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் குறித்து இக்கலந்துரையாடலின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் சார்பில் கலா

[8ம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு படையினரின் லீவுகள் யாவும் ரத்து

(கொழும்பு)

சகல பாதுகாப்புப் படை வீரர்களினதும், பொலிஸாரினதும் விடுமுறைகள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே விடுமுறையைப் பெற்றுக்கொண்டவர்களும் உடனடியாகக் கடமைக்குத் திரும்பவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## பொலிஸ் - இராணுவத்தின் அத்துமீறிய நடவடிக்கையே மட்டு. பிரச்சனைக்கு காரணம்

\- அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பிலுள்ள சிங்களப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் அத்துமீறிய செயல்களே அங்கு

(8ம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பகுதிக்கு 2500 புலிகள்! - அனுரா

(கொழும்பு)

''கிழக்குமாகாணம் நோக்கி 2500க்கும் அதிகமான விடுதலைப் புலிகள் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். அங்கு தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல பொலிஸ் நிலையங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். தற்

(8ம் பக்கம் பார்க்க)

## கும்புறுமுல்லைராணுவமுகாம் புலிகளின் கட்டுப்பாட்டில் 600 இராணுவத்தினர் கைது

(மட்டக்களப்பு)

கல்குடாத் தொகுதியில் உள்ள கும்புறுமுல்லை அரசாங்க அச்சகக் கட்டிடத்தில் முகாமிட்டிருந்த 600 இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்றுப் பிற்பகல் இந்த முகாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இங்கு நடைபெற்ற மோதல் சம்பவங்களினால் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், புலிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

## கல்முனை, களுவாஞ்சிக்குடியில் தொடர்ந்து பதற்றம்!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் நேற்று அமைதி நிலவியது.

அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை. பாடசாலைகள் நடைபெறவில்லை. மட்டக்களப்பு பஸ் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. பஸ்சேவை எதவும் இடம்பெறவில்லை.

நேற்று முன்தினம் கடைகள் பூட்டப்பட்டு சனநடமாட்டம் குறைவாகக் காணப்பட்ட போதிலும், நேற்று அங்குமிங்குமாகச் சில கடைகள் திறந்திருக்கக் காணப்பட்டன. மக்கள் நடமாட்டமும் நேற்றுச் சற்றுக் கூடுதலாக இருந்தது

இதேநிலைமை ஏறாவூர், வாழைச்சேனை, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளிலும் காணப்பட்டது. ஆனாலும் களுவாஞ்சிக்குடி, கல்முனைப் பகுதிகளில் நேற்றும் பதற்றம் நீடித்தது. மக்கள் நடமாட்டம் மிகமிகக் குறைவாகவே இருந்தது.

## பஸ் சேவைகள் தொடர்ந்துபாதிப்பு

[யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று யாழ் - மட்டக்களப்பு இ.போ.ச. பஸ்சேவை நடைபெறவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில் சேவையும் இல்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெறவில்லை.

கொழும்பு - மட்டக்களப்பு ரயில்சேவை இன்றும் நடைபெறக்கூடிய சாத்தியம் இல்லை என்று ரயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கில் ஷெல் தாக்குதல்: 30 பொதுமக்கள் பலி

### 60க்கு மேற்பட்டோர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட எல்லைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்களில் முப்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்தே இராணு

(8ம் பக்கம் பார்க்க)

## "ஆயுத பலத்தை அனுமதிக்க முடியாது!" கிழக்கு சம்பவம் பற்றி ரஞ்சன்

(கொழும்பு)

''எந்தப் பிரிவினராக இருந்தாலும் நாட்டின் எந்தவொரு பகுதியையும் ஆயுத பலத்தின் மூலம் கைப்பற்ற அனுமதிக்கப்படமாட்டாது. அதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடில்லை.'' இவ்வாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**புறெயிலர் குஞ்சுகள்**

Christombu Farm, Threc Acre Farm, Bairaha Farm புறெயிலர் குஞ்சுகளை முன் கூட்டியே பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். Bairaha Farm புறெயிலர் குஞ்சுகள் மட்டும் July 15 வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். July 15 பின் தேவையான அளவு Bairaha Farm புறெயிலர் குஞ்சுகளை பெற்றுக் கொஅளலாம். சற்குண ராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்.

(சி–3957)

### நாவல்கள்

மீரா வெளியீடுகள், பிறந்த நாள் பரிசாக வழங்குவதற்கு ஏற்ற நூல்கள். பெரியவர் களுக்கு, ''பூஜைக்காக வாழும் பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பெண் ஒருத்தியின் கதை, சிறுவர்களுக்கு ''இராவணன் கோட்டை'' சிறுவர் நவீனம். சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன.

(சி. 3969)

### புலமைப்பரிசில்|பரீட்சை (ஆண்டு 5)

கடந்த வருடம் மிகச்சிறந்த பெறு பேற்றை பெற்ற எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (ஏழாவது) 17-06-90 ஞாயிறு மு.ப. 10-30 — 1.00 பி. ப. 3.30 மணி நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும். பெறுபேறு, விஞத்தாள் விளக்கம் 24-06-90 ஞாயிறு மு.ப. 10.30 மணிக்கு வழங்கப்படும். இப்பரீட்சை இணுவில் எவரஸ்ட் இன்சிரியூற்றிலும் நடைபெறும் சிறந்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.

(சி 3979)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# "அமைதிநிலையைப் பயன்படுத்தி தயார் நிலைக்கு உஷாராவோம்" — செங்கதிர்

(அச்சுவேலி)

''தொடர்ச்சியான இழப்புக்களுக்கும் பாதிப்புக்களுக்கு மிடையே இன்றுகாணப்படும் இடைக்கால அமைதிநிலை, நிரந்தரமானது அல்ல. இதனை நாளைய போராட்டத்துக்கு தயாராகும் காலமாக கருதி தமிழ்மக்கள் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். இந்த நிலைப்பாட்டுடன்தான் நாம் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் கூறினர்.

அச்சுவேலியில் நடைபெற்ற ''போராளிகள் நினைவு தின'' நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திரு. செங்கதிர் மேலும் உரையாற்றுகையில்; ''இதுவரை தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தில் இழந்த போராளிகள், போராட்ட முன்னேற்றத்தின் படிக்கற்கள். தமிழ்ஈழ இலட்சியத்தின் உறுதியான அடித்தளங்கள். அவர்களை நினைவு கூர்வதன்மூலம் அவர்கள் என்ன இலட்சியத்திற்காகப் போரடி வீரமரணம் அடைந்தார்களோ அந்த லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும். பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்பன தமிழினத்தின் உரிமையைப் பெற்றுத் தரமாட்டாது. பேச்சுவார்த்தை ஒப்பந்தம் என்பனவற்றை அரசுகாலம் கடத்துவதற்குரிய கருவியாக பாவித்து வருகின்றது. அரசு உண்மையான நோக்கத்துடன் செயற்படவில்லை என்பதை அண்மைக்கால சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன. பேச்சுவார்த்தை பயனற்றதாக முடியுமாஞல் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கவேண்டும்'' என்றுர்.

போராளிகள் நினைவுநாள் நிகழ்ச்சிகள் திரு. என். செல்லக்கண்டு தலைமையில் நடைபெற்றன. நிகழ்ச்சிகளை வீரவேங்கை குட்டியின் தந்தை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

போராளிகள் நினைவாக அச்சுவேலி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி அச்சுவேலி சங்கானை வீதிச் சந்தியில் உள்ள மேஜர் அல்ரோட் நினைவுத் தூபி, போராளிகள் நினைவுச் சுவர்ச் சித்திரம் என்பன திறந்து வைக்கப்பட்டன.

அச்சுவேலி புத்தூர்ப்பகுதியிலிருந்து வீரவேங்கைகளாக சேர்ந்து வீரமரணமடைந்த 20க்கு மேற்பட்ட போராளிகளின் திருவுருவப்படங்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கிறன.

வலிகாமம் பொறுப்பாளர் திரு. இ.ஆஞ்ஞநேயர், யாழ். மாவட்ட மகளிர் பிரிவு பொப்பாளர் செல்வி மாலினி, வலிகாமம் பிரிவு மாணவர் பொறுப்பாளர். மற்றும் திரு சிவசாமி, செல்வி லதா இராசையா உட்பட பலர் உரையாற்றினர். (74)

## சேவைக்கு பாராட்டு

[கொழும்பு]

''நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் கூட திரு. சச்சிதானந்தசிவம் இந்து சமயத்திற்கு பெரும் தொண்டாற்றினர். இந்துமாமன்ற கட்டிட வேலையை ஆரம்பிக்க அவர் அயராது பாடுபட்டார்''

இவ்வாறு கொழும்பு இந்து மாமன்றம் நடத்திய அமரர் சச்சிதானந்தசிவத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய கலாநிதி வேலாயுதபிள்ளை கூறினர்.

பேராசிரியர்பூலோகசிங்கம், இராசபுவனேஸ்வரன், கு:குருசாமி, அமரர் சச்சிதானந்தசிவத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்கள் [152]

# நடமாடும் தொழில் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்கக் கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் படித்து வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெறும் பொருட்டு நடமாடும் தொழில் பயிற்சி நிலையமொன்றைத் திறந்து பயிற்கி அளிக்கவேண்டும்.''

இவ்வாறு நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்தி மன்றம், நெடுந்தீவு மரநாட்டு இயக்கம், நெடுந்தீவு ஐக்கிய இளம் விவசாயிகள் கழகம், மலைமகள் மகளிர் சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச்சங்கம், நாகபூஷணி மகளிர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம் ஆகிய பொதுச் ஸ்தாபனங்கள் தொழிற்திணைக்கள உதவி ஆணையாளருக்குத் தனித்தனியாக அனுப்பியுள்ள மகஜர்களில் கோரியுள்ளன.

''படித்து வேலையற்று நூற்றுக்கணக்கான யுவதிகள் வீடுகளில் தொழிலின்றி முடங்கிக் கிடக்கின்றனர். கடந்த எட்டு வருடங்களுக்கு முன்னர் செயற்பட்ட நடமாடும் தொழிற்பயிற்சி நிலையத்தை மீண்டும் திறக்கும்படி வேண்டுகின்ரேம்'' என்று கோரியுள்ளனர். (133)

# இலவச மதிய உணவு முத்திரை தயிர், பால்உணவு, மீன், முட்டை வழங்கவும் ஆலோசனை

(நெடுந்தீவ)

பாடசாலைகளில் இலவச மதிய உணவு நிகழ்ச்சித் திட்டத்தை 'மாணவ முத்திரை வழிமுறை'யின் கீழ் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யபபட்டுள்ளன.

ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக பொருள்களை வழங்கவும் கல்வி, உயர் கல்வி அமைச்சின் முடிவுக்கு அமைவாக இப் பொருட்களை விநியோகிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களால் மாணவ முத்திரைக்கு' வழங்கப்படும் உணவுப் பொருள்கள் அனைத்தும் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் படடுள்ளது.

உணவுப் பொருள்களில் தயிர், பால் உணவு, மீன், முட்டை என்பனவற்றையும் சங்கங்கள் விற்பனவு செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கோருமிடத்து உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்கள் வழங்கவும் தெரிவாக்கப்பட்டுள்ளது.

நாளாந்தவரவுடைய மாணவன் ஒருவனுக்கு உருத்துடைய முத்திரையின் பெறுமதி ரூபா மூன்று ஆகும். மூன்று ரூபாவிற்குக் குறைந்த பெறுமதியுடைய பொருட்களை கொள்வனவு செய்யும் மாணவனுக்கு மிகுதிக் காசை மீளளிப்புச் செய்வது பற்றியும்இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

'மாணவ முத்திரை' தொடர்பான செயற்பாடுகளைக் கணிக்க கல்வித் திணைக்களம் பிரதேச உதவி அரசாங்க அதிபர் பணிமனை மற்றும் வறுமை நிவாரண அமைச்சு, கூட்டுறவுத் திணைக்களம் ஆகியவை சம்பந்தப்பட்டுள்ள என்று தெரிவிக்கப்பட்டது. (133)

## அபிஷேக வைபவம்

(நெடுந்தீவு)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் யாழ்ப்பாண சேகர முகாமைக்குரு அருட் திரு. கே. பி. கோவிந்தராஜ், திரு. பென்ஜோ பொன்னையா, திரு. பென் குணரத்தினம் ஆகிய இருவருக்கும் ஸ்தானப் பிரசங்கிகளுக்காக அபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தார்.

யாழ்ப்பாண புனித பேதுறு வானவர் ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட இவ் அபிஷேகத்திற்கு, அருட் திரு. ஆபரணம் சிங்கராயர் அருளுரை வழங்கினர். (133)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

[கொக்குவில்]

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் பணிப்பின்பேரில் சுற்ருடல், சூழ்நிலை சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படுத்திய கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன. (135)

## மக்கள் கஷ்டம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை உப அலுவலகப் பொதுச்சந்தையில் மலகூடம் இல்லாமையால் அங்கு பொருட்களை வாங்கவும் விற்கவும் செல்லும் பொதுமக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திற்கு அதிக வரியைப் பெற்றுக்கொடுக்கும் இந்தப் பொதுச்சந்தைக்கு ஒரு மலசலகூடம் இல்லாதிருப்பது பெரும் குறையாகவே அமைந்துள்ளது. (139)

## சேவை நலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளையதம்பி வித்தியாலயத்தில் பதினேழு வருடகாலமாகக் கடமையாற்றி தற்பொழுது ஓய்வுபெற்ற திருமதி இ. தெய்வேந்திரம் பிள்ளைக்கு வித்தியாலயஅதிபர் கா. கனகசபை தலைமையில் சேவைநலம் பாராட்டு விழா நடைபெற்றது.

## யாழ்ப்பாண மாநகர சபை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் மதுவரிச் சட்ட விதிமுறைகளினுலும் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளினுலும் விபரிக்கப்பட்டுள்ளவையான (மதுபரிமாறப்படும்) விளையாட்டுக் கழகங்கள் மதுபானச்சாலைகள், மதுபானக்கடைகள் ஆகியவற்றுக்கு 1990ம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரமெதுவும் வழங்கப்படவில்லையெனவும், 1989ம் ஆண்டு சம்பந்தமாக வரி செலுத்திய மேற்குறித்த எத்தகைய அமைப்புகளினதும் அனுமதி 1989 மார்கழி 31ஆம் திகதியுடன் முடிவு பெற்றுவிட்ட தென்றும் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
11-06-90.

(ஏ 802)

## நன்றி நவிலல்

### தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து

4-6-90 அன்று காலமான எமது தந்தையின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் மலர்வளையங்கள் சாத்தியோர். கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர் அன்னரின் ஆத்ம சாந்தி வேண்டுதல்களிலும், கலந்து எமக்கு ஆறுதலும், தேறுதலும் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

குடும்ப அங்கத்தினர்.

டெய்சி மகால்
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

(ஏ 805)

# ஜனதிபதி பிரேமதாசா 17ல் அம்பாறை விஜயம்

[அக்கரைப்பற்று]

ஜனுதிபதி ஆர். பிரேமதாசா 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அம்பாறைக்கு விஜயம் செய்வார்.

அன்று காலை அம்பாறை டி. எஸ். சேனநாயக்கா மத்திய கல்லூரி மண்டபத்தில், மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொறியியலாளர்கள் ஆகியோரைக் கொண்ட கூட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஜனுதிபதி சிறப்புரை நிகழ்த்துவார்.

இது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. குணதிலக முதன்நாயக்கா மேற்கொண்டு வருகிருர். அம்பாறை மாவட்டத்தில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக இந்த விஜயத்தின்போது விரிவாக ஆராயப்படும். [142]

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

யாழ். நாச்சிமார் கோவிலடியில் கந்தப்பன் தருமரத்தினம் என்பவரது தேசிய அடையாள அட்டை (53284102V) சி. தருமலிங்கம் என்பவராலும், யாழ் நாவலர் வீதியில் தவராஜசிங்கம் விபுலனின் தே. அ. அட்டையும் (693640148V) மற்றும் 'பர்ஸ்'ம் கே. ராஜு என்பவராலும் கண்டெடுக்கட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் உரிமை கோரலாம்.

# ஈரானுக்கு இரகசிய ஆயுத விற்பனை

# முன்னுள் அட்மிரலுக்கு மோத சிறை

(வாஷிங்டன்)

**ஈரானுக்கு இரகசியமாக ஆயுதவிற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் முன்னுள் அமெரிக்க அதிபர் திரு. றேகனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அட்மிரல் ஜோன் பொயின் ரெக்ஸ்ரருக்கு ஆறுமாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

கடந்த சில வருடங்களாக இக்குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வந்தது. அட்மிரல் பொயின் ரெக்ஸ்ரர் குற்றவாளியாக காணப்பட்டு நேற்று முன்தினம் இவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

ஈரானுக்கு இரகசியமாக ஆயுதங்களை விற்றபணத்தினை நிக்குரகுவாவில் அரசுக்கு எதிராக போராடி வந்த 'ஹொன்ரு' கிளர்ச்சியாளருக்கு அனுப்பியதாக அதிபர் றேகன் நிர்வாகத்துக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கடந்த சில வருடங்களாக நடைபெற்ற விசாரணையில் நூற்றுக்கணக்கான முக்கிய அதிகாரிகள், இராணுவ தளபதிகள், அமைச்சர்கள் அதிபர் றேகனும் சாட்சியமளித்திருந்தார்கள். இதற்கான தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட அட்மிரல் பொயின் ரெக்ஸ்ரருக்கு மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (சி)

## யாருடையது

யாழ். ஆறுகால் மடத்தடியில் யாழ். மார்பு சிகிச்சை நிலைய ஊழியர் ஒருவரினால் திறப்பு ஒன்று கண்டெடுக்கப்பட்டு, 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சி தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

## நிதி ஒதுக்கிடு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. [153]

## மாணவர் மன்றம் ஒன்று கூடல்

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்ற ஒன்றுகூடலும் மதிய போசன விருந்தும் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

மாணவர் மன்ற தலைவி செல்வி க. இராசேஸ்வரி தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. கே. குலசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கல்வி அதிகாரி திரு. என். கணேசபிள்ளை கொத்தணி அதிபர் திரு. கே. சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர். (74)

## தண்ணீர் தொட்டிக்கு அளவு மானி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபையின் குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தில் உள்ள சகல குடிதண்ணீர் வழங்கும் தொட்டிகளுக்கும் 'அளவுமானி' பொருத்தப்பட்டு வருகின்றது.

'அளவுமானி' பொருத்துவதால் தண்ணீர் விரையமாக்கப்படுவது கட்டுப்படுத்தடுபடும் எனத் தெரிவிக்கப்பப்கின்றது. (133)

## சர்ச்சைக்குரிய குடியரசுத் தலைவர்களுடன் அதிபர் கொர்பச்சேவ் சந்திப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் சுதந்திர குடியரசுகளாக பிரகடனம் செய்த மூன்று குடியரசுகளின் தலைவர்களையும் நேற்று அதிபர் திரு. கொர்பச்சேவ் சந்தித்து பலமணிநேரங்கள் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

அண்மைக் காலத்தில் சுதந்திர குடியரசுப் பிரகடனங்கள் செய்யப்பட்டதன் மூலம் சோவியத்தில் எழுந்துள்ள பெரும் நெருக்கடிகளை சமாளிக்கும் விதத்தில் அதிபர் திரு. கொர்பச்சேவ் சில யோசனைகளை இச் சந்திப்பில் முன்வைத்திருந்தார்.

எனினும் இதனை மேற்படி லித்துவேனியா, லத்ஷயரி, எஸ்தோனியா குடியரசுத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்களா நிராகரித்தார்களா வென்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை. பல கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

சோவியத் யூனியனிலுள்ள 15 குடியரசுகளுக்கும் பொதுவான விதத்தில் அதிபர் கொர்பச்சேவ் பல முக்கிய யோசனைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் மேலிடம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஒரு துளி விஷம் ஒருவரைக் கொல்லும்

(லண்டன்)

ஆரம்பத்தில் பாம்புகளின் மீது ஏற்பட்ட அச்சம் காரணமாக ஒன்று சேர்ந்த மூவர் பாம்புகளின் கழகம் ஒன்றை அமைத்து அவைகள் பற்றி ஆராய்ச்சி செய்துவருகின்றனர்.

பாம்புகளின் ஒருதுளி விஷம் சாதாரண மனிதனைக் கொல்லப்போதுமானது. வழமையாக பாம்பு ஒன்று ஒருவரைத் தீண்டும்போது 30 துளிவிஷத்தை கக்கிவிடுகிறது. பல தடவை பாம்புக்கடிக்குட்பட்டு மயிரிழையில் உயிர்தப்பிய இம் மூவரும் தொடர்ந்து பாம்பு ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகின்றனர். (அ)

## சத்துணவு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளி குடும்பத்திட்டச் சங்கத்தினால் போசாக்குக் குறைந்த பிள்ளைகளுக்கும், தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

முதலுதவி, வைத்தியஆலோசனைகள், சுகாதாரக் கருத்தரங்குகள் போன்றவற்றை இச் சங்கம் தொடர்ந்து நடாத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## சிறுவர் இல்லம்

(நெடுந்தீவு)

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதினத்தால், வட்டுக்கோட்டையில் ''லீவிஸ்போல்ட்ங்'' ஆண்களுக்கான இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இரண்டு லட்சத்து அறுபதினுயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்தக் கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டதாக அமையும் என்றும், எழுபத்திஆறு வசதி குறைந்த சிறுவர்களுக்கு இது பயன்படுத்தப்படும் என்றும் கட்டடப் பொறுப்பதிகாரி திரு. எஸ். இரத்தினவேல் தெரிவித்தார். (133)

## ருமேனியாவில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மக்கள் மீது ராணுவம் தாக்கு

(புகாரஸ்ற்)

ருமேனியாவின் தலைநகர் புகரஸ்ற்றில் அரசுக்கு எதிராகப் பல்லாயிரக்கணக்கானோர் நேற்று பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இவர்களைக் கலைக்க இராணுவம் பல முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ருமேனியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராகவும், ஆட்சியாளர்களின் கடும் போக்கையும் எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் தலைநகரில் அரச அதிபர் மாளிகைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கணக்கான பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், தடியடிப் பிரயோகம் செய்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க மிகுந்த பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்தின் மீது கற்கள், போத்தல்கள், அழுகிய பழங்களை வீசித் தாக்கியதாகவும் தெரியவருகிறது. (சி)

## "மத மாற்றத்தை தடுத்து நிறுத்துவோம்"

(காங்கேசன்துறை)

''பழமையும், பெருமையும் வாய்ந்த சைவ மதத்தை நாம் பேணிக்காக்க வேண்டும். அற்ப உதவிகளை அளித்து மத மாற்றம் செய்யும் நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டும். சைவமதத்தின் பெருமைகளையும் சிறப்புக்களையும் சகலருக்கும் எடுத்து விளக்க வேண்டும்.''

இவ்வாறு அளவெட்டி வடக்கு அமெரிக்கன்மிஷன் தமிழ் கலவன்பாடசாலையில் இடம்பெற்ற திருஞான சம்பந்தர் குருபூசை விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராஜரத்தினம் கூறினுர்.

பாடசாலை அதிபர் திரு. ப. தளையசிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்;

''எமது மதத்தின் பெருமைகளை உலகுக்கு எடுத்து விளக்கியவர்கள் நாயன்மார்கள். இந்த வரிசையில் ஞான சம்பந்தர் பெரும் சாதனை புரிந்துள்ளார். சிவசின்னமாக விளங்கும் திருநீற்றின் பெருமையை உலகுக்கு உணர்த்தியவர் அவர். சைவத்தின் உண்மையைச் சமணர்களுக்கு உணர்த்தி, சைவம் தழைத்தோங்க வழிசமைத்தவர்'' என்றுர். (86)

## ஜனதிபதிக்கு திருமணம்

### உபஜனதிபதிகள் மாப்பிள்ளைத்தோழர்

[பனமா]

பனமா நாட்டின் ஜனதிபதியான 53 வயதுடைய என்டாரு 23 வயதுடைய சட்ட மாணவியைத் திருமணம் செய்கிறுர். உப-ஜனதிபதிகள் இருவரும் இவரது மாப்பிள்ளை தோழர்களாக வைபவத்தில் கலந்து கொள்கிறுர்கள்.

இவரது முதல் மனைவி கடந்த வருடம் காலமானுர். ஒரே ஒரு மகளையுடைய ஜனதிபதி என்டாருவின் திருமணத்தின் போது தம்பதிகள் பரிமாறவிருக்கும் மோதிரத்தை அவருடைய ஒருவயது பேரக் குழந்தை தேவாலய பலிபீடத்துக்கு எடுத்துச் செல்ல விருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜனதிபதியின் புதிய இளம் மனைவி, ஆன்டயஸ், அவரது ஒரே மகளிலும்பார்க்க மூன்று வயது குறைவானவர்.

கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்கப்படைகள் பனமா நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்ததையடுத்து ஆட்சிக்கு வந்த இவரது நாட்டில் 35 வீத மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவிப்பதும் நாட்டின் பொருளாதாரம் பெரும் சீர்குலைவு அடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பதவி வெற்றிடம் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையிலுள்ள தமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பாலசிங்கம் இது சம்பந்தமாக வடக்கு கிழக்கு மாகாணசபை உள்ளுராட்சிச் சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டுள்ளார். [153]

## "காங்கேசன்துறை சிமெந்து ஆலை தொழிலாளர் நலன் கருதி புதியதிட்டங்கள் செயல்படும்"

(காங்கேசன்துறை)

''காங்கேசன்துறை சீமெந்து ஆலைத் தொழிலாளர்களின் சேமநலனை முன்னிட்டுப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றேம். விரைவில் இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும். அப்போது தொழிலாளர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள்.''

இவ்வாறு காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன சீமெந்து ஆலைத் தொழிலாளர் சேமநலத்தின விழாவில் கலந்துரையாற்றிய தொழிற்சாலை ஆளணி உத்தியோகத்தர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா கூறினுர்.

வெள்ளிவிழா மண்டபத்தில் திரு. இ. பூரணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது: ''தொழிற்சாலை வளர்ச்சிக்குத் தொழிலாளர்களது கடும் உழைப்பும், சுற்றுடலில்

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

''எவன் ஒருவனுல் அவன் பிறந்த குலம் உயர்வடைகிறதோ அவன்தான் நற்பிறவியுடையவன்''.

—பர்த்ருஹரி நீதி

## நமது நோக்கு

# கடன்பட்டார்நெஞ்சங்கள்...!

''கடன்பட்டார் நெஞ்சம்போற் கலங்கினுன் இலங்கை வேந்தன்...''– கம்பனுக்குத் தெரிந்திருந்தது கடன்பட்டவர்கள் படும்பாடு

கடன்பட்ட நாடுகளின் அவலநிலையை, பொதுமக்கள் படும் வேதனைகளிலிருந்து இன்று நாம் அறியமுடிகிறதல்லவா?

இன்று, மூன்ருவது உலக நாடுகள் பல, செல்வந்த நாடுகளிடமும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுவிட்டுத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலுள்ளன.

இத்தகைய கடன்பட்ட நாடுகளில் 15 நாடுகள் குழு ஒன்று அண்மையில் மலேசியாவில் மூன்றுநாள் மாநாடு நடாத்தியுள்ளது.

அமெரிக்காவிலே இருபெரும் வல்லரசுகளின் தலைவர்களான புஷ், கொர்பச்சேவ் ஆகியோர் சந்தித்து உலகப் பிரச்சனைகளை ஆராய்ந்த காலகட்டத்தில், ஆசியாவிலே இந்த ஏழை நாடுகள் கூடியிருக்கின்றன.

ஆயுதக் குறைப்புப்பற்றி அவர்கள் அங்குபேச, கடன் சுமையைக் குறைக்கும் வழிகள் பற்றி இவர்கள் இங்கு பேசியிருக்கிருர்கள்.

செல்வந்த நாடுகளுக்கும், கடன்பட்ட நாடுகளுக்கும் இடையேயான இடைவெளியை எவ்வாறு குறைக்கலாமென்று ஆராய்ந்திருக்கிருர்கள்.

மூன்றுநாள் மாநாட்டின் பின் எடுத்த முடிவு என்ன? ''கடன் பளுவைக் குறைப்பதற்கு மேலும் நிதியைத் தந்துதவுங்கள். ஏனெனில் கடன்பளுப் பிரச்சனை எமது நாடுகளை மாத்திரமல்ல, செல்வந்த நாடுகளையும் பாதிக்கும் பிரச்சனை!''

சர்வதேசச் சந்தையில், செல்வந்த நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டு போகின்றது; அதனுல், வறிய நாடுகளின் அரசியற், பொருளாதார, வெளியுறவுக் கொள்கைகளில் 'அழுத்தங்கள்' அதிகரிக்கின்றன.

எனவே, சர்வதேசச் சந்தையில் வறிய நாடுகளும் கூடிய பங்குபற்றும் வகையில், மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருக்கிருர்கள்.

''பெற்ற கடனைத் திருப்பிக்கொடுக்க விருப்பமில்லாமலில்லை; இருக்கும் பொருளாதார நிலையில் எப்படித் திருப்பிக் கொடுக்கலாமென்பதே பிரச்சனை!'' எனக் கூறியிருக்கிருர் மாலைதீவு ஜனதிபதி கையூம்.

இதற்காக நிபுணர்கள் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இந்த மகாநாட்டிலே சகல கண்டங்களையும் சேர்ந்த வறிய நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகளும் பார்வையாளர்களாகக் கலந்திருக்கிருர்கள்.

வளர்ச்சியுற்ற நாடுகள் எப்படி ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன? தமது நாடுகளின் விவசாய உற்பத்திகளுக்கு மானியம் வழங்குகின்றன. இதனுல் இவை உலகச் சந்தைக்கு வர, பாதிக்கப்படுவது கடன்பட்ட நாடுகளின் உற்பத்தியே.

இந்த நடவடிக்கைகள் வர்த்தகப் போட்டியை நீதியற்றதாக்குகின்றது. சீனி, உணவுக்கான எண்ணெய் வகைகள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

கடன்பட்ட நாடுகள் தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கைத்தொழிலை வளர்ப்பதற்கான தடைகளை நீக்க வேண்டும்.

கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலத்தை நீட்டுவது; மிகப் பின்தங்கிய நாடுகளின் கடனை ரத்துச் செய்வது; வட்டி வீதத்தைக் குறைப்பது. இவை சில ஆலோசனைகள்.

இதேவேளை, இலங்கை போன்ற கடன்பட்ட நாடுகள், பெற்ற கடனைப் பொருளாதாரவளர்ச்சிக்கு மாத்திரமா பயன்படுத்தி வருகின்றன? இனக்குரோதங்களை வளர்த்துவிட்டு, இராணுவத்தீர்வுக்காகக் கோடிகளைக் கொட்டி அழுவதை நிறுத்தி, பொருளாதாரத்தைப் பேணிக் காக்க முன்வரவேண்டாமோ?

## தேரேறி வா!

தெங்கீன்ற கீற்றுரசித் தென்றல் வீசத்
தேன்மலர்கள் மீதமர்ந்து தும்பி பாடச்
சங்கீன்ற கடல்முத்துச் சுடர்க ளேந்த
சொரிகின்ற விழிக்குடங்கள் சரந்தொ டுக்க
நுங்கீன்ற சுவைத்தமிழென் நாவு திக்க
நெஞ்சமன்பு வெள்ளத்தில் நனைய எம்மை
இங்கீன்ற தாய்போல அரவ ணைக்க
அழகான தங்கத்தேர் ஏறி வாநீ

★ ★ ★

கற்புத்தே னருவிதவழ் குன்றே! நாளும்
கோடிகோடி புதுமைமலர் கொட்டுங் காவே!
தற்பரனும் யேசுவையே திருக்க ரத்தில்
தாங்கிநின்ற மறைக்கரும்பே! தவக்கொ முந்தே!
அற்புதமாய் மச்சமதற் குபதே சித்து
அழியாத நாபடைத்த அன்பே! ஏற்றும்
பொற்பமைந்து புகழ்விரித்த பாஷை யூரில்
புடைசூழும் பக்தரைக்கண் பாரு மையா.

--பாஷையூர் மு. சிங்கராயர்.

(இன்று பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் தேர்த்திருவிழா)

### இன்று தலையாளி ஞான வைரவர் கும்பாபிஷேகம்

# நாவலர், யோகர் விருப்போடு பூசித்த வடுகனுலயம்

திருமதி கு. ஷண்முகடாஸ்
(ஆசிரியை - யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்)

''பக்தியினுலே பாரினில் எய்திடும் மேன்மைகள் கோடி'' என்ருர் சுப்பிரமணிய பாரதியார். ''பத்தி பண்ணிக் கொண்டிருந்தால் முத்தி பெறலாமே'' என்ருர் கோபாலகிருஷ்ணபாரதி. பக்திசெய்து நாம் பேரின்பப் பெருவீட்டை பெறுவது மட்டுமல்ல, இவ்வுலகின்கண் வாழ்வாங்கு வாழ்ந்து பின்வானுறை தெய்வத்துள் வைக்கப்படும் நிலையையும் பெறமுடியும் என்று பேசுகிறது. தெய்வத்திருமுறை. இவ்வாறு பக்தியினுல் எவ்வளவோ நன்மைகளை நாம் அடைந்தோம், அடைகிறேம் இனியும் அடைவோம்.

இந்த நோக்கில் சமீபகாலமாக ஈழவள நாட்டின் ஆலயங்கள் பலவகை இன்னல்கள் மத்தியிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டுக் குடமுழுக்குப் பெற்று வருகின்றன. இவ்வாறு புனருத்தாரணம் செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் தோற்றமளிக்கும் ஆலயங்களுள் ஒன்ருகத் தலையாளி ஞானவைரவர் ஆலயம் திகழ்கிறது. அன்னியர் ஆட்சியின் போது ஈழத்திலே எங்கள் சமய உணர்வினைக் காத்து நின்ற பெருந்தெய்வமாக விளங்கும் வைரவப்பெருமானுக்கு ஈழத்திலே எடுக்கப்பட்ட ஆலயங்கள் எல்லாவற்றுள்ளும் மிகப்பெரிதாகவும் தனித்துவமாகவும் அமைந்தது தலையாளி ஞானவைரவர் ஆலயமாகும்.

தலையாளி கிராமத்தின் இதயமாய், பண்பாட்டின் நிலைக்களனாய் விளங்கும் ஞானவைரவர் ஆலயம்நான்கு தலைமுறைக்கு முந்திய இக்கிராமத்தின் மூத்த குடிமக்களாய் விளங்கிய பெரியார்களால் இக்கிராம வாசிகளின் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டது.

ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் தன் நாவன்மையாலும் மனத்தின்மையாலும் போராடித் தன் இருகண்ணெனக் காத்த நல்லைநகர் தந்த நாவலர் பெருமான் பல்லக்கேறிவந்து இந் ஞானவைரவர் முன்றலில் புராண படனமும் பிரசங்கங்களும் ஆற்றித் தலையாளி வாழ் மக்களையும் வைரவர் ஆசிபெற வந்த ஏனையோரையும் தூய சைவர்களாக வாழ வகுத்தார். நாவலர் போற்றிய தலமாக மட்டுமன்றி ''முழுவதும் உண்மை எப்பொழுதோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை, நாம் அறியோம்'' -என்ற தன் குருநாதர் செல்லப்பா சுவாமிகளின் மகாவாக்கியங்களைத் தன் தாரக மந்திரமாகக் கொண்ட கொழும்புத்துறை தந்த முனிவர் சிவயோக சுவாமிகளின் திருவடிகள் உலாவி வந்த பண்ணியதலமாகவும் இவ்வாலயம் விளங்குகிறது.

இழந்த இப்பொலிவை ஞான வைரவர் வழிபடுசபையினர் பல இன்னல்களின் மத்தியில் புனருத்தாரணம் செய்து மீண்டும் புதுக்கிப் பெருக்கி மேலும் சந்தான கோபாலர் முருகன் ஆகியோர்களையும் விநாயகரோடு பரிவார மூர்த்

(5-ம் பக்கம் பார்க்க)

## வளரும் சந்ததி செவிடாகும் அபாயம்

கடந்த கால நிகழ்வுகளின் பல்வேறு தாக்கங்களாலும் பாதிக்கப்பட்டுப் பக்குவப்பட்ட நம் மண்ணின் மக்களின் உடல், உளவளர்ச்சி மனிதாபிமானமின்றிப் பாதிப்புறுவதைப்பார்த்திருக்க முடியுமா? வளரும் நம் சந்ததி செவிப்புலன் இழக்கும் நாள் வெகு தொலைவில்இல்லை. ஏன் என்று கேட்கிறீர்களா?

## மக்கள் கருத்து

இன்று யாழ்நகரில் மக்கள் குடியிருப்புகள், பாடசாலைகள் அதிகமாக வாழும் சுற்ருடலில், எழுப்பப்படும்அநாவசிய ஒலிகள், பாடல்கள் ஒலிபரப்புமிகைப் படுத்தப்பட்ட தொனியில் ஒலிபரப்புதல். இது மட்டுமா? போட்டி ஒலிபரப்புகள். வாகனங்கள், இயந்திரங்கள் உபகரணங்கள் மூலம் எழுப்பப்படும் பெரும் சத்தம் அப்பப்பா! இதைக் கேட்கயாருக்குத்தான் பொறுமை உண்டு?

இதனுல் உடனடிப் பாதிப்பு யாருக்கும் தெரிவதில்லை. ஆனுல் நாளடைவில் மக்களின் உடல் உள வளர்ச்சி பாதிப்புறுகிறது. பள்ளிச்சிருர்களின் படிப்பு பாழாகிறது. அமைதி குலைகிறது. இதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துசெயற்படுவார்களா?

சே. சுகந்தன்.
யாழ்ப்பாணம்.

## மாநகரசபை கவனிக்குமா?

கடந்த பல வருடங்களாக பெரியகடைப் பகுதிக்கு காலை 6 மணியிலிருந்து 7 மணி வரையும் பின்னேரம் 4.30 மணியிலிருந்து 5-30 மணிவரையும்; தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. கடந்த 6 நாட்களாக காலையில் தண்ணீர் வருவதில்லை. நாங்கள் கடைக்காரர், காலை 5 மணிக்கு எங்களுக்கு தண்ணீர் அவசியம் தேவைப்படுகிறது. ஆகவே அதிகாலை 5 மணியிலிருந்து 6-30 மணியளவரை. தண்ணீர் விநியோகம் செய்யும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேம். தண்ணீர் வரியைக் கட்டுகிறேம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடைஉரிமையாளர்கள் சார்பாக:
எஸ். கந்தசாமி.

## காசினியோர்க்கருள் கூற தேரேறி வருகிறுன்

நாளுமொரு புதுமை செய்யும்
நாயகனே அந்தோனி
வாழும்வகை எதுவென் றெண்ணி
வாடிநிற்கும் பக்தர்கள்
சூழும்அலை, வெள்ளம் மேல்
சுந்தரத் தேரிலேறி
கோலமுடன், கொலுவிருந்து
கூருகின்ருன் நல்லாசி;

★

யேசுவொரு கரத் தேந்தி
வீசுமொளி தனைத்தாங்கி
மாசுமறு அற்ற மாந்தன்
மகிமைகொள் புனிதனுகி
வீசுமிளம் தென்றல் கூட
விருப்புடனே துதிபாட
காசினியோர்க் கருள் கூற
தேரேறி வருகின்ருன்.

--அ. அமிர்தராஜ்

(இன்று புனித அந்தோனியார் பெருநாள்)

## பலதும் பத்தும்

### அந்தரப்படுவானேன் .?

சில நெருக்கடியானவேளைகளிற் சிலர் அமைதியாக இருக்க, வேறு சிலர் 'அந்தரப்பட்டு, சன்னதம்' ஆடுகிருர்கள் அல்லவா...?

பரீட்சைகளின் போது... சிலர் அமைதியாக இருந்து எழுத, வேறுசிலர் நெருக்கடி நிலைக்குள்ளாகி, முகங்கள்மாறி, வியர்த்துக்கொட்டும் காட்சிகளைக் காண்கிறேமல்லவா?

காரணமென்ன...? மதிநுட்ப வேறுபாடுதான் என்ருர்கள் உள நிபுணர்கள்.

மதிநுட்பம் அதிகம் உடையவர்கள் அமைதியாக இருப்பார்களாம்; அவர்களின் சிந்தனைத் தொழிற்பாட்டுக்கு அதிகசக்திவளம்தேவைப்படுவதில்லை!

கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றிச்சாட் ஜே. ஹரியர் மூளையின் தொழிற்பாட்டை அறிய முற்பட்டிருக்கிருர். பொசிற்ரேன் எமிஷன் டோமோகிருபர்' (Positron Emission Tomographer) என்ற பரிசோதனைக் கருவியை (Scanning Machine) உருவாசகினுர்.

17 பேருக்குச் சிறிதளவு கதிர்வீச்சுக் கலந்த சீனியை உட்கொள்ளச் செய்துவிட்டுப் பரிசோதித்திருக்கிருர் மூளையில் உள்ள கலங்கள் சீனியைச் சக்தித் தேவைக்காகப்பயன்படுத்துகின்றன. அதனை அளந்த போது...?

குறைந்தளவு சீனியையே மதிநுட்பம் கூடியவர்கள் சிந்தனைத் தொழிற்பாட்டுக்குப் பயன்படுத்தியிருந்தார்களாம்...!

''சதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவாள்''-என்கிருர் வள்ளுவர் வெகுளி தோன்ருது காத்து, கல்விபெற்று அடங்குதலே வல்லவனது செயலாகும் என்பதுதான் கருத்து...!

நெருக்கடிகளின் போது... அந்தரப்படாது... ஆற அமரச் சிந்திக்க வேண்டாமோ...?

வாணி

# “இன்று நிலவும் அமைதி அரசுக்குசாதகமாகக்கூடாது

(நாவற்குழி)

''இன்று எமது தமிழீழத்தில் இலைமறை காய்போல் மறைந்திருக்கும் எமது தமிழ்க் கலைஞர்கள் பலரை நாம் தட்டிக் கொடுத்து எமது கலை கலாசாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஸ் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற 'தடாகம்' அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி கலை கலாசாரப் பிரிவினரால் தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இவ் அறிமுக விழாவில் திரு. தினேஸ் தொடர்ந்து பேசுகையில்;

''இன்று நிலவுகின்ற அமைதியை மனதில் கொண்டு எமக்கு எல்லா உரிமைகளும் கிடைத்து விட்டது என்று எண்ண வேண்டாம். எமது பூரண உரிமைகள் கிடைக்கும்வரை போராட அனைவரும் தயாராகுங்கள்'' என்றார்.

''கடந்த காலங்களில் எமது போராளிகளை நாம் பயன்படுத்தியபோது சிறுவர்களின் எதிர்காலம் ஆயுதம் ஏந்திப் போராடுவதால் சீரழிக்கப் படுகிறது என்று பலர் கூறினார்கள். அந்த சிறுவர்களால்தான் இந்திய வல்லாதிக்கத்தினை விரட்டியடிக்க முடிந்தது என்பதை நீங்கள் மறந்து விடமாட்டீர்கள். அவ்வாறான சிறுவர்கள் சிந்திய இரத்தத்தினால்தான் நாம் இன்று இந்த தடாக விழாவையே நடாத்தக் கூடியதாக இருக்கிறது''. என்றார்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில், ''தமிழீழ மக்களுக்கு இந்த அமைதி இடைவெளியில் ஏற்பட்ட மாயை நீங்கவேண்டும். இந்த அமைதி சிங்கள அரசாங்கத்திற்கு சாதகமாக அமையக் கூடாது. இவ்வளவு காலமும் நாம் பல சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி வந்தோம். ஆகையால் இனிமேல் நாம் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். நாம் இந்த விஷயத்தில் அலட்சியப் படுத்தினால் நாளடைவில் உங்களது வீட்டுக்கு அடுத்தவீடு சிங்கள வீடாக மாறும் நிலைதான் உருவாகும். ஆகையால் நீங்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எமது பூரண சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டும்'' என்றார்.

ஆசிரியர் நாகேஸ்வரன் பேசுகையில், 'எம்மண்ணிற்காக உயிர்நீத்த வீரவேங்கைகளின் கல்லறைகளில் நின்றுதான் இந்த விழாக்களைக் கொண்டாடுகிறோம். இன்று இங்கு காதல் திருமணம் போன்றவற்றை கலைவடிவில் தரவே கலைஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் வியட்னாம் போன்ற நாடுகளில் உள்ளது போன்ற விடுதலை உணர்வை தட்டியெழுப்பக் கூடிய கலைஞர்கள் இங்கு இல்லை'' என்றும் குற்றம் சாட்டினார்.

ஆசிரியர் திரு. க. சந்திரசேகரம் பேசுகையில், 'கவர்ச்சிமிகு சினிமாப் பாடல்களும், பொப்பிசைப் பாடல்களும் நீண்டகாலம் நிலைப்பதில்லை, சுத்தமான சாஸ்திரிய சங்கீதம் கலந்த தியாகராஜா பாகவதர் போன்றோரின் பாடல்கள் என்றும் நிலைத்திருக்கும். பாமரர் முதல் பல்கலைக்கழகம் வரை இன்று போற்றப் படுகின்ற காத்தவராயன் நாட்டுக் கூத்தை எடுத்துக் கொண்டால் அது இன்றும் மறையாமல் இருப்பதற்கு காரணம் அதன் உன்னதமான கலையம்சமேயாகும்' என்றார்.

ஆசிரியர் இரத்தினகுமார் பேசுகையில், ''தேனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் கலையுணர்வு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.'' என்றார்.

சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. கந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி கலைகலாசாரப் பொறுப்பாளர் திரு. ஏ. வி. உலகநாதன் தடாக விழாவை அறிமுகம் செய்து வைத்தார். சாவகச்சேரி நகரப் பொறுப்பாளர் திரு. கோபால் நன்றியுரை நல்கினார். கூட்ட முடிவில் கவியரங்கம், வழக்காடு மன்றம், நாட்டுக்கூத்து, நாடகங்கள் என்பனவும் இடம் பெற்றன. (107)

## காங்கேசன்துறை

(ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மக்களது ஒத்துழைப்புமே காரணமாக அமைகின்றது. இப்படியான தொழிற்சாலைகள் மூலம் சுற்றுடல் மாசுபடுகின்றபோதும் அதனையும் சகித்துக்கொண்டு தொழிற்சாலை வளர்ச்சிக்கு உதவும் சுற்றுடல் பொதுமக்களை நாம் மறந்துவிடக் கூடாது. இப்படியான விழாக்கள் மூலம் அவர்களுக்கும் தொழிற்சாலைக்கும் இடையே பிணைப்பை ஏற்படுத்தவேண்டும்.

''புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து சிறிது தூரத்திலேயே பொதுமக்கள் வசிக்கிறார்கள். ஆனால் அத் தொழிற்சாலை அந்த மக்களுக்காக பல்வேறு உதவிகளை அளித்துவருகிறது. அங்குள்ள பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வசதிகளைக்கூடச் செய்து வருகிறது. அதுபோன்று பல திட்டங்களை இங்கும் நாம் செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.''

சீமெந்து ஆலை நிர்வாக முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதன் பேசுகையில், ''இப்படியான விழாக்களைக் கடந்த காலங்களில் நாம் கொண்டாடமுடியாத நிலை மாறி, இன்று சுமுகநிலை ஏற்பட்டமைக்குக் காரணமான இளைஞர்களுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இதுபோன்ற விழாக்கள் தொழிலாளர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தவல்லன. இப்படியான விழாக்களை ஏற்பாடுசெய்து நடத்தவேண்டும்'' என்றார்.

விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி ஞானபண்டிதன் பரிசில்களை வழங்கினர். (86)

# வர்த்தக முதலீடு அதிகரிக்கப்படும்

[கொழும்பு]

இலங்கையிலுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களில் தீவிர வர்த்தக முதலீட்டுமுயற்சிகளை இந்த ஆண்டு மேற்கொள்ள கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த முதலீட்டு முயற்சிகளுக்கு ஹொங்கொங் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்க வாக்களித்துள்ளனர். (அ)

## 450 ஏக்கர் பரப்பில் ரூ. 80 கோடி செலவில் கைத்தொழில் வலயம்

(கொழும்பு)

ஹொருவலவில் மூன்ருவது கைத்தொழில் வலயம் உருவாக்குவது சம்பந்தமாக ஆய்வு, ஆலோசனைகள் நடத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த விசேட குழு கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

மூன்றுநாள் தங்கியிருக்கும் இக்குழுவினர், நிதி அமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

சுமார் 450 ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவுள்ள இந்த வர்த்தக வலயத்து தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 80 கோடிரூபா தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த எடுக்கப்படவேண்டிய ஆக்கபூர்வ நடவடிக்கைகள்குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவுடன் இணைந்து இலங்கை அரசு அதிகாரிகள் ஆய்வு நடாத்தவுள்ளனர். (அ)

## இலவச ஆங்கில வகுப்புகள்

(பருத்தித்துறை)

மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவை மேம்படுத்தும் முகமாகத் தும்பளையில் இலவச ஆங்கில வகுப்புகள் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

3ம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (சாதாரண தர) வகுப்பு வரை ஆங்கிலக் கல்வி இங்கு போதிக்கப்படுகிறது.

மலேசியாவில் றப்பர் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு. எஸ். காராளசிங்கமே இந்த இலவச ஆங்கில வகுப்புக்களை நடாத்திவருகின்றார். [52]

## வருடாந்த மகோற்சவம்

(உடுவில்)

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சிவபூதராய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 20ம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் முதலாம் திகதியுடன் முடிவடைகின்றது.

ஜூன் மாதம் 27-ம் திகதி சப்பறத்திருவிழாவும், 28ம் திகதி ரதோற்சவமும், 29-ம் திகதி காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் மறுநாள் ஜூலை முதலாம் திகதி மாலை பூங்காவனமும் நடைபெறும்.

கிரிஜா ஜோதி சிவஸ்ரீ ஞானசம்பந்தஜோதிநாதக் குருக்கள் மகோற்சவம் கிரியைகளை நடாத்திவைப்பார். (109)

# ‘பேச்சுவார்த்தைக்கு காரணம் எம்மீதான அனுதாபமல்ல”

## இன்றைய நிலையில் எந்நேரத்திலும் மாற்றம் வரலாம்!’

- ஆஞ்சநேயர்

(அச்சுவேலி)

''தற்காலிக அமைதிக்காகவோ சலுகைகளுக்காகவோ பேச்சுவார்தை நடத்தப்படவில்லை. தமிழினத்தின் நிரந்தர அமைதிக்காக, சாவு—சரித்திரம் — சமாதி ஆகியவற்றுக்கு அருகில் நின்றுதான் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம். கடந்த காலங்களைப் போல அரசு ஏமாற்ற முயலுமானால் அதற்குரிய பெறுபேற்றினை அடைந்தேதீரும்''

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமம் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

அச்சுவேலியில் வீரமரணமடைந்த வீரவேங்கை தாமு இரத்தினத்தின் நினைவாக அவரின் சொந்த இடமான புத்தூர் கிழக்கில் விளையாட்டு விழா நடைபெற்றது. விளையாட்டு விழாவைத் தொடர்ந்து புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு வலிகாமம் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:

''17 வருட ஆயுதப்போராட்ட வரலாற்றில் இலங்கை இராணுவமும் இந்திய ராணுவமும் தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் பலத்தை தெளிவாக அறிந்துகொண்டன. இரண்டரை வருடகாலம் இந்திய இராணுவத்துடன் மோதினோம். இந்திய ராணுவம் பல்வேறு இழப்புகளுடன் வெளியேறியது. இந்த வெற்றிகள் சாதனைகள் பொதுமக்கள் தந்த ஆதரவினாலும் புலிகளின் இலட்சிய உறுதியினாலும் தான் நிலைநாட்டப்பட்டன. தமிழீழத்தில் துரோகிகளின் தலையீடும் இராணுவக்கெடுபிடியும் இருக்கும் வரை தமிழர் சுதந்திரத்துடன் தலை நிமிர்ந்து வாழ முடியாது. இவை இரண்டும் முற்ருக அகற்றப்படவேண்டும். அது தான் எமது சுதந்திரத்தின் முதற்படி.

''இலங்கை அரசாங்கம் தமிழர்களின் சுதந்திரப்போரை அடக்கி ஒடுக்கி வந்த நடைமுறைகளை கைவிட்டு பேச்சுவார்த்தை நிலைக்கு திரும்பியது என்ருல் அது தமிழர் மீது கொண்ட அனுதாபத்தினால் அல்ல. இந்த நிலையில் எந்த நேரத்திலும் மாற்றம் ஏற்படலாம். எமது பலம் குன்றுமானால் மீண்டும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம், அதனைத் தயார் கொள்ளத் தக்க விதத்தில் எமது பலம் அதிகரிக்கப்படவேண்டும்.

''தாமு இரத்தினம் மன உறுதியுடன் மிக நெருக்கடியான வேளைகளில் எல்லாம், கொண்ட இலட்சியத்தை வென்றெடுக்க போராடினான். அந்த போராட்டத்தில் எதிரியிடம் உயிருடன் பிடிபடாது வீரமரணம் அடைந்தான். அவனது நினைவுநாள் நிகழ்வுகள் அவனது இலட்சியத்தை வென்றெடுக்க உதவவேண்டும்.''

காலை நிகழ்ச்சிகள் புத்தூர் மாவீர் மண்டபத்தில் வலிகாமம் இராணுவப்பொறுப்பாளர் திரு. கிளியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (74)

## நாவலர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திகளாக்கி அவர்களுக்கும் ஆலயங்களமைத்து இன்று குடமுழுக்குக் காண்கின்றனர்.

பரமனை மதித்திடாப் பங்கயாசனின் ஒருதலை கிள்ளிய வடுகனுக்கு ஈமத்தில் அமைந்த இப்பெரிய ஆலயத்தின் கும்பாபிஷேக தினமான இன்று அவரின் அருளை எல்லோரும் பெறப் பிரார்த்திப்போமாக.

## வருடாந்த உற்சவம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 20ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பிரசித்திபெற்ற இக்கோவில் ரதோற்சவம் இம் மாதம் 28 ம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 29 ம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (139)

## விசுவநாதர் குடமுழுக்கு

(சென்னை)

தென்காசியில் உள்ள காசி விசுவநாதர் ஆலய குடமுழுக்கு விழா விரைவில் நடைபெறவிருக்கிறது.

1442-ம் ஆண்டில் பராக்கிரமபாண்டிய மன்னனால் இவ் ஆலயம் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ் ஆலய குடமுழுக்கு விழாவை தமிழக மக்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறார்கள். (க)

## நீச்சல் குளம்

(சென்னை)

தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புப்பெற்ற சிவகங்கையில் 10 லட்சம் ரூபா செலவில் பிரமாண்டமான நீச்சல் குளம் ஒன்று விரைவில் அமைக்கப் படவிருக்கிறது.

இதற்காகும் செலவுகளை மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் என்றும் குறிப்பிட்ட நீச்சல் தடாகத்தின் மூலம் பாடசாலை மாணவர் முதல் பலதரப்பட்டவர்களும் நன்மையடைவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

## புதிய அதிபர்

(நெடுந்தீவு)

அருட் சகோதரி லூயிஸ் நெடுந்தீவு மத்தி றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் புதிய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதிபராகப் பணியாற்றிய அருட் சகோதரி லொறன்ரீனு, கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் பாடசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார். (153)

## திருவிழா நிறைவு

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று திருச்சுரூபப் பவனியுடன் நிறைவுபெறும். (74)

# "ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க விரைவில் புதிய திட்டம்!"

## இணைப்புச் செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"அதிபர்கள் ஆசிரியர்களுடைய சம்பளங்களில் பல தரப்பட்ட முரண்பாடுகள் இருக்கின்றன. அதிபர்கள், ஆசிரியர்களுடைய சம்பள முரண்பாடுகளை நீக்க புதிய திட்டம் தீட்டுமாறு கல்வி அமைச்சர் பணித்துள்ளார்.

இவ்வாறு கல்வி ராஜாங்க அமைச்சின் இணைப்புச் செயலாளர் திரு வெ. சபாநாயகம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 16வது எழுச்சி மாநாட்டில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: ஆசிரியர்கள் சமுதாயத்தின் சிற்பிகள். ஆசிரியர்களுக்குத் தகுந்த அந்தஸ்து கொடுக்கவேண்டும். அமைச்சு மற்றும் திணைக்களங்களுடன் தமிழில் எழுதிப் பதில் தமிழில் வரவில்லை என்றால் கல்வி ராஜாங்க அமைச்சுடன் உடன்தொடர்புகொள்ளுங்கள்.

ஆசிரியர் தொழிற்சங்கம் தொழிற்சங்க உரிமைக்கு மட்டும் குரல் கொடுக்காது, கடமைக்கும் குரல் கொடுக்க வேண்டும். கடமையில் பிழை விடும் ஆசிரியர்களை தொழிற்சங்கம் திருத்த வேண்டும்.

"தமிழ்மொழி எங்கள் மொழி. இதனை எவராலும் அழிக்கவோ சிதைக்கவோ முடியாது என்ற வைராக்கியம் கொண்ட அதிகாரியாக நான் செயற்பட்டு வருகின்றேன். தமிழ் மொழிக்கும், அதிகார அமுலாக்கலுக்குமாக இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நான் அதிகாரியாகச் செயல்பட்டு வருகின்றேன். இந்த ஒன்பது மாகாணிங்களிலும் தமிழ்மொழி மலரவேண்டும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஒத்துழைப்போடு தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் அயராது உழைப்பேன்."

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. கா. சோமசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களையும், கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தவர்களையும் வரவேற்று திரு. திரு. தா. அருணகிரிராசா வரவேற்புரையாற்றினர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மறைந்த தலைவர் திரு. எஸ். கே. வணசிங்காவுக்கு அஞ்சலி செலுத்தி இரு நிமிடநேர மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

திரு. சபாநாயகம் தொடர்ந்து பேசுகையில்: அதிகாரிகள் ஆசிரிய உலகுக்கு தம்மால் செய்யக்கூடிய பணிகளைக்கூட எழுதுவினைஞர்களின் சொற்சேட்டு செய்யத் தவறிவிடுகின்றனர். எழுதுவினைஞர் செய்ய முடியாது என்பதை அதிகாரிகள் கேட்டுக்கொண்டு ஆசிரியர்களுக்கு செய்ய வேண்டிய பணியை செய்யாத நிலை கண்டு நானே முயற்சித்து ஆசிரியர்களுக்கு உரிய வேலையை செய்து கொடுத்துள்ளேன். சகல நிலையிலும் உயர்ந்து காணப்படும் ஆசிரிய சமூகத்துக்கு நாம் எமது உச்ச நிலை பணியை ஆற்ற வேண்டும்.

தேசிய கல்வி நிறுவனம் இலங்கை முழுவதுக்குமான பாடத்திட்டத்தை தயாரிக்கின்றது. இதில் தமிழ் பகுதிகளுக்கு தேவையான பாடத்திட்டங்களை வகுக்கவும் பொருத்தமான அதிகாரிகளை நியமிக்கவும் உரிய அதிகாரத்தை நான்பெற்றுள்ளேன்; எனது அதிகாரத்தை வைத்து எமது பிரதேசத்தில் தமிழையும் கல்வியையும் வளர்க்க நான் முயற்சிப்பேன். எனது முயற்சிக்கு ஆசிரியசங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னைநாள் கல்விகலாசார செயலாளர் திரு. ஆ. க. மாணிக்கம் நிதிச்செயலாளர் திரு. நா. நடராசா, உபசெயலாளர் திரு. ச. முத்தையா, பத்திரிகை செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் ஆகியோரை பாராட்டி திருவாளர்கள் தண்டாயுதபாணி (திருமலை மாவட்டதலைவர்), திரு. வீ. த. குமாரசாமி [மட்டக்களப்பு மாவட்டதலைவர்] திரு. த. பஞ்சலிங்கம், திரு. நா. சோதிநாதன் ஆகியோர் உரையாற்றினர். (153-109)

---

உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:

# கொஸ்டாரிக்காவிடம் ஸ்கொட்லன்ட் தோல்வி

[ரோம்]

இத்தாலியில் நடைபெறும் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், இம்முறை உலக உதைபந்தாட்ட அவதானிகளும், ரசிகர்களும் முன்கூட்டியே தெரிவித்த கருத்துக்கள் அனைத்துக்கும் எதிர்மாறுகவே முடிவுகள் வந்த வண்ணம் இருக்கின்றது.

முதல்நாள் போட்டியில் ஆர்ஜன்ரீனு, கமரூனிடம் தோல்வி அடைந்தது. பலம்வாய்ந்த கோஷ்டியென கணிக்கப்பட்ட ரஷ்யா றூமேனியாவிடம் தோல்வியடைந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியொன்றில், உதைபந்தாட்டப்போட்டி வல்லுநர்கள் என வர்ணிக்கப்பட்ட ஸ்கொட்லன்டை உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்ட கொஸ்டரிக்கா வெற்றிபெற்றது. உலக ரசிகர்கள் கூட்டத்துக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளும், வேகமாக விளையாடிய போதிலும் இடைவேளைவரை எவருமே கோல்கள் எதையும் போடவில்லை.

இடைவேளையின் பின்பு, ஸ்கொட்லன்ட் கோஷ்டியினர் கோல்கள்போடும் பல சந்தர்ப்பங்களை அடுத்தடுத்து நழுவவிட்டவண்ணம் இருந்தனர். 63வது நிமிடத்தில் யாருமே எதிர்பாராதவிதத்தில் கொஸ்டாரிக்கா ஒருகோலைப்போட்டு வெற்றிபெற்றது.

### வெற்றி தோல்வி இல்லை

இங்கிலாந்துக்கும் - அயர்லாந்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு கடும் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில், இங்கிலாந்துக் கோஷ்டி, எதிர் பார்த்தது போல் சிறப்பாக விளையாடாவிட்டாலும், இடைவேளைக்கு முன்பே ஒருகோலைப் போட்டு முன்னணி வகித்தது. இடைவேளையின் பின் அயர்லாந்துக் கோஷ்டியும் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தியது.

### இன்றைய ஆட்டங்கள்

'பி' பிரிவில் ஆர்ஜன்ரீனுவை எதிர்த்து ரஷ்யா மோதும்.

'ஈ' பிரிவில் உருகுவேயை எதிர்த்து ஸ்பெயின் மோதும். [வி]

---

## இன்று அறிமுகவிழா

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்டக் குடும்பத் திட்டச் சங்கத்தினுல் திட்டக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாசியப்பிட்டிக் கிராமத்தில் இதுகுறித்த அறிமுகவிழாவும் கலை விழாவும் இன்று புதன்கிழமை நடைபெற உள்ளன.

மாசியப்பிட்டி சந்திக்கருகாமையில் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. என். கனகசபை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஸ்ரீகாந்தா, திட்டமுகாமையாளர் திரு. எஸ். பி. அன்பானந்தன், வைத்திய அதிகாரி திரு. இலட்சுமணன் உட்படப் பலர் கலந்துகொள்வர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (86)

---

## மறைந்த ஆணையாளரின் நினைவாக திரிசாரணர் மென்பந்து கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திரிசாரணர் குழுப் பிரிவினரால் மறைந்த சாரணர் மாவட்ட ஆணையாளர்கள் ஞாபகார்த்தமாக மென்பந்து கிரிக்கட் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

வரதலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கட் போட்டி 6ஓவர் கொண்ட 6பேர் பங்குபற்றும் போட்டியாக அமையும். இப்போட்டியில் வெளிக் கழகங்கள் பங்குபற்றலாம் எனவும் சச்சிதானந்தம் வெற்றிக் கேடயத்துக்கான 20 ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியில் சாரணர் துருப்புக்கள் மாத்திரம் பங்குபற்றமுடியுமென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சச்சிதானந்தம் வெற்றிக் கேடயத்துக்கான போட்டியில் பங்குபற்றவிரும்பும் சாரணர் துருப்புக்களும், வரதலிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்களும் 15ம் திகதிக்கு முன் யாழ். மாவட்ட திரிசாரணர் குழுத் தலைவருக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# மன்னார் செய்திகள்

### சான்றிதழ்கள்

மன்னார் பிறப்பு, இறப்புக் காரியாலயத்தில் தற்சமயம் பிறப்பு, இறப்பு விவாகசச் சான்றிதழ்கள் மிகவும் துரிதமாக வழங்கப்பட்டுவருகின்றன.

தாமதங்களைத் தவிர்த்து விண்ணப்பங்கள் மூன்று நாட்களுக்குள் பரிசீலனை செய்யப்பட்டு, சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதனுல் பொதுமக்கள் அவதியின்றி வன்செயல் பாதிப்பு நிவாரணங்கள் ஏனையதேவைகளை உடன் பூர்த்திசெய்யக் கூடியதாகவுள்ளது.

### கஞ்சா சிக்கியது

பள்ளிமுனையில் மன்னார் விடுதலைப்புலிகளால் கஞ்சா கைப்பற்றப்பட்டது. மன்னார் நகரப் பொறுப்பாளர் திரு. ஸ்ரனி தலைமையில் சென்ற மன்னார் விடுதலைப் புலிகளின் புலனுய்வுத்துறையினர்தேமஸ் பிளாஸ்கிற்குள் மறைத்து வைக்கப்பட்ட கஞ்சாவை கைப்பற்றினர்.

அத்தோடு கஞ்சாவை விற்பனை செய்ய முயற்சித்த நபரையும் கைது செய்தனர். இதேவேளையில் அனுமதி பெருது நிலையத்தில் விற்பனை செய்யப்பட்ட சில் சாராயத்தையும் கைப்பற்றினர். தொடர்ந்து புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

### கோரிக்கை

அரசின் உயர்மட்ட அலுவலகங்கள் திருகோணமலையில் அமையப் பெற்றபடியாலும் மன்னாரிலிருந்து பலர் திருகோணமலை அரச அலுவலகங்களில் பணிபுரிவதாலும், மன்னார்- திருகோணமலை பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு மன்னாரிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் திருகோணமலை இ. போ. ச. சாலைக்கு மகஜர் அனுப்பி உள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் மன்னார்-திருகோணமலை சேவை நடைபெற்றது. பின்னர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

### முருங்கன் மக்கள் வங்கி

கடந்த ஆறு வருடங்களாக இயங்காது மூடப்பட்டிருந்த முருங்கன் மக்கள் வங்கிவெகு விரைவில் திறக்கப்படவுள்ளது.

ஏற்கனவே முருங்கன் பகுதி மக்களுக்கு அடகு வைத்த நகைகளும் அங்கேயே வைத்து வழங்கப்படும். இவ்வங்கியின் முகாமையாளராக தற்சமயம் சுன்னுகம் மக்கள் வங்கியில் கடமையாற்றும் திரு. எஸ். ஆனந்தநாயகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதே வேளையில் தற்சமயம் மன்னார் மக்கள் வங்கியில் முகாமையாளராகக் கடமை புரியும் திரு. சிறிபத்மநாதன் பதவியுயர்வு பெற்று வடபிராந்திய உதவி முகாமையாளராக யாழ்ப்பாணம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

### மன்னாரில் மாத்தயா

மன்னார் மாவட்டங்களிலுள்ள பிரதேசங்களில் வட்ட அவைகளை அங்குரார்ப்பணம் செய்யும் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயா மன்னார் வந்துள்ளார்.

முசலி, நானுட்டான் பண்டிவிரிச்சான், அடம்பன் மன்னார் பிரதேசத்திலும் மேற்படி வட்ட அவைகளின் கூட்டங்கள் இடம் பெற்றன. இதற்கான ஒழுங்குகளை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சு. சுரேஸ்செய்திருந்தார். (85)

---

## "விளையாட்டுத்துறையில் முன்னணி மாணவர்கள் வாழ்வில் வெற்றிபெறுவர்"

(பருத்தித்துறை)

"கல்வியுடன் விளையாட்டுத் துறைகளிலும் முன்னணியில் திகழும் மாணவர்கள் எதிர்காலத்தில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து வாழ்க்கையில் வெற்றி பெறுவர்" இவ்வாறு மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய வடமராட்சி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. பீ. வீரபத்திரன் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. என். சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியை வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி எஸ். செல்லத்துரை, கொடியையேற்றி ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. வீரபத்திரன் குறிப்பிட்டதாவது; "இப்பாடசாலை பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்து முன்னணியில் திகழ்வது மகிழ்ச்சிக்குரியதாகும். இன்றைய மாணவர்களான எதிர்காலச் சந்ததியினரின் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்தி அவர்களை நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதற்கான முழுமையான நடவடிக்கைகளும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்ருேர்கள், நலன் விரும்பிகள் சகலரும் இணைந்து ஒரு குடும்பம் போல் செயற்படவேண்டியது முக்கியமாகும்.

விளையாட்டுப்போட்டியில் கதிரவேற்பிள்ளை இல்லம் முதலாமிடத்தையும், நாவலர் இல்லம் இரண்டாமிடத்தையும் நாகலிங்கம்இல்லம் மூன்ருமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பாடசாலையில் விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு. எஸ். கந்தசாமி நன்றியுரை வழங்கினுர். (52)

---

## இராசி பலன்

13 - 06 - 1990

புதன்கிழமை

மேடம்: நன்மதிப்பு, பயந்தசுபாவம், உற்சாகம்.

இடபம்: கடின சித்தம், உழைப்பு, உறவினர்தொல்லை.

மிதுனம்: பயந்த சுபாவம், வெற்றி, பொய் பேசுதல்.

கடகம்: அரசியல் தர்க்கம், செல்வாக்கு, அன்னிய உதவிகள்.

சிங்கம்: சாஸ்திர விருப்பு, செலவு, வசீகரம்.

கன்னி: வாகனசுகம், சுபச் செய்தி, தந்திரப்போக்கு.

துலாம்: ஆடம்பரம், கௌரவம், கடிதவரவு.

விருச்சிகம்: ஆடம்பரம், அமைதியில்லாதநிலை, நீசர் உதவி.

தனுசு: தெளிவு, புதியதிட்டம், இலாபம்.

மகரம்: அற்பர்நேசம், பீடை, வாகனசுகம்.

கும்பம்: செல்வாக்கு, தொழிற்சிந்தை, உதவிகள்.

மீனம்: இடமாற்றம், படபடப்பு, நீசர்உதவி.

இ. மகாதேவா

# வன்செயல் நஷ்டஈடு பற்றி அரச அதிபர் தீர்மானிக்கலாம்

(மட்டக்களப்பு)

வன்செயல் நடவடிக்கைகளின் போது இராணுவத்தினுலோ அல்லது வேறு பாதுகாப்புப்படையினுலோ சுட்டுக் கொல்லப்பட்டோருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கான முடிவை அரசாங்க அதிபர்கள் தீர்மானிக்கமுடியும் என்று புனர்வாழ்வு அமைச்சின் திட்டப்பணிப்பாளர் திரு. ரி லங்காநேசன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டோருக்கு ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று புனர்வாழ்வு அமைச்சின் சுற்று நிருபமொன்றில் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதைச் சாட்டாக வைத்து அம்பாறை மாவட்டத்தில் பலருக்கு நிவாரணம் மறுக்கப்படுவதாக மட்டக்களப்பில் நடைபெற்ற வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழு மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஏனைய மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையிலேயே திரு. லங்காநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்தமோதலில் இத்தகையோர் கொல்லப்பட்டிருக்கலாம்.

எனவே இதன் மீது தீர்மானம் எடுக்கும் முழுப் பொறுப்பும் அரசாங்கஅதிபர்களினுடையதே என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில் சீடா நிறுவனம் வட கிழக்கு மாகாண சபைக்கு 100 ஜெனறேற்றர்களை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான தேவைப்பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (121)

## இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பர்வதபத்தினி அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற்றுப் பூர்த்தியான பின்னர் மாலையில் பர்வதபத்தினி அம்பாள் திருவீதி எழுந்தருளுவார். பல லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும் இத்திருக்கோயில் உரும்பிராயில் உள்ள ஒரேயொரு சக்திபீடம் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிர்வாகிகள்

[வட்டுக்கோட்டை]

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, வட்டுக்கோட்டை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட சனசமூகநிலையங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டம், சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி ராணி சின்னத்தம்பி தலைமையில் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் (தலைவர், கலைநகர் நேருஜி சனசமூகநிலையம்), உபதலைவர்:வே.மாணிக்கம் (வட்டுக்கோட்டைசர்வோதய சனசமூகநிலையம்), செயலாளர்: கே.ஸ்கந்தராசா (சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகம்), உப செயலாளர்: எஸ். சிவலிங்கம் (ஜனசக்தி சனசக்தி சனசமூக நிலையம்), பொருளாளர்: வே. புலேந்திரன் (பிளவத்தை சனசமூக நிலையம்), நிர்வாக உறுப்பினர்கள்: கி. மயில்வாகனம் (வட்டுக்கோட்டை அம்பாள் சனசமூக நிலையம்), எஸ்.சிதம்பரநாதன் (சங்கரத்தை சனசமூக நிலையம்), வே. மாரிமுத்து (வட்டுக்கோட்டை அறிவொளி சனசமூக நிலையம்), வே. துரைராசா (வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையம்), ஆர்.சங்கர் (துணைவி கலைவாணி சனசமூக நிலையம். (139)

ஃ ஃ ஃ

(கிளிநொச்சி)

உதயநகர் கிராம அபிவிருத்திச் சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ச. புண்ணியமூர்த்தி, உப தலைவர்கள்: கா. தம்பு, சி. ஜெபநேசன், செயலாளர்: ஆ. க. கணேஸ், உப செயலாளர்: சு. செல்வரெத்தினம், பொருளாளர்: எஸ். கே. தர்மலிங்கம் கணக்குபரிசோதகர்: மு. சுபேந்திரன் 7 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (83)

# வேடுவர் தலைவனை ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

வேடுவரின் பாரம்பரிய பிரதேசம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்குரிய விஷயங்கள் குறித்துக் கலந்து பேசுவதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, வேடுவர் தலைவர் திஸாகாமியை எதிர்வரும் சனிக்கிழமை கண்டியில் சந்திக்கவிருகிறார். (அ)

## கிழக்கு செய்திகள்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆறு வருடங்களுக்குப் பின்பு சிவில் நிர்வாகம் சிறிதளவு செயல்பட ஆரம்பித்துள்ளது அதிகாரிகள் சுதந்திரமாக திடீர்திடீரென காரியாலயங்களுக்கு சென்று நிருவாக நடவடிக்கைகளை கவனித்து வருகின்றனர்.

### சுயதொழில் முயற்சி

கல்முனையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ கூட்டுறவுச்சங்கத்தை சேர்ந்த 19 உறுப்பினர்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்காக தலா பத்தாயிரம் ரூபாவிற்கான காசோலைகளை தேசிய இளைஞர் சேவைகள் மன்றச்செயலாளர் திரு.பெனடிக்குமாரகே வழங்கினார்.

### நாட்டுக் கூத்து

அக்கரைப்பற்று பகுதியில் அருகிக்கொண்டுவரும்நாட்டுக் கூத்தை பாதுகாத்து வளர்ப்பதற்காக கிழக்கிலங்கை ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆறு ஆயிரம் ரூபா நிதியை அன்பளிப்புச் செய்துள்ளதாக நாட்டுக்கூத்து கலை அமைப்பின் முக்கியஸ்தர் திரு.சி. சிவஞானமூர்த்தி தெரிவித்தார்

### தமிழ் மொழித்தின விழா

தமிழ்மொழியும் தமிழ் கலாசாரமும் நீண்ட வரலாற்றை கொண்டுள்ளதெனவும், தமிழ் கலாச்சாரம் பலவருடங்களாக தமிழ் மொழி மூலம் வளம் பெற்று வந்துள்ளதென்றும் கலாசாரம் தமிழ்மொழி மூலமும் நடனம், சங்கீதம், நாடகம் மூலமும் வளிப்படுத்தப்பட்டதாயும் திருமலையில் நடந்த மாகாண தமிழ் மொழித்தினவிழாவில் பிரதம விருந்தினராக பங்குபற்றிய, வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராசா தெரிவித்தார்.

### கடன்

காத்தான்குடி விவசாய விஸ்தரிப்புநிலையத்தில்பதிவு செய்து விவசாய முயற்சிகள் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

## சைவமகாஜன இல்லப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு.வீ. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

பிரதம விருந்தினராக திருமதி அ. துரைசிங்கமும் (கல்வி அதிகாரி, பொதுநிர்வாகம், மருதனுமடம் உதவிக் கல்விப் பணிமனை) சிறப்பு விருந்தினராக திரு. சு. இரத்தினராசாவும் (கல்வி அதிகாரி திட்டமிடல், மருதனுமடம் உதவிக் கல்விப் பணிமனை), திரு. ராஜனும் (யாழ் மாவட்ட அரசியல் அமைப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி) கலந்து கொள்வார்கள்.

# இப்படியும் நடக்கிறது

அரசகரும மொழியான தமிழின் நிலை பற்றியும், அதன் அமுலாக்கம் குறித்தும் வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழில் கடிதங்கள் வராமைக்கு, போதியளவு தமிழ் அதிகாரிகள் இல்லாமையும் காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மாறாக எல்லா அமைச்சுகள், திணைக்களங்களிலும் தமிழர்கள் நியமிக்கப்பட்டால்...?

2000ம் ஆண்டு 'யாவருக்கும் இல்லம்' போல்; தொடர்புகளனைத்தும் தமிழ்மொழியில் என்றாகிவிடும் என்று நீங்கள் மகிழ்கிறீர்கள் போலும்!

ஏன் 2000க்குப் போகிறீர்கள்? 1990 இலேயே நிற்போம்!

கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி. ராஜமனோகரி புலேந்திரனின் முயற்சியால் அண்மையில் கல்வியமைச்சில் தமிழ்ப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் நோக்கங்களில் ஒன்று சுற்றுநிருபங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அனுப்புதல் என்றும் அறிவிக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க; அந்தத் தமிழ்ப்பிரிவில் அண்மையில்; கொழும்பில் அமைச்சினால் நடத்தப்படவுள்ள அகில இலங்கைத் தமிழ்த்தினவிழா பற்றி பத்திரிகையாளர்களுக்கு விளக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட அரசு அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அனைவருமே தமிழர்கள்தான் திருமதி ராஜமனோகரி தமிழில் பேசி அளவளாவினார். அமைச்சின்தமிழ் அதிகாரி ஒருவரும் இது பற்றி விரிவாக விளக்கினார்.

''தமிழ் மாணவர்களின் தமிழறிவை மேம்படுத்துதல்; அவர்களின் தமிழ்மொழித் தரத்தை உயர்த்துதல் என்பன இவ்விழா நடத்துவதன் முக்கிய நோக்கமாகும்'' என்றார் அவர்.

ஒரு சின்ன விஷயம். கொஞ்சம் அருகே வாருங்கள். அந்தத் தமிழ் அதிகாரி பேசியது சுத்த ஆங்கிலத்தில்தான்!

0 0 0

வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் செய்திகளை வாசிக்கும்போது அறிவிப்பாளர் பிழைவிட்டால், வருத்தம் அல்லது மன்னிப்பு தெரிவிப்பதில்லை என்று சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

நேற்று இலங்கை வானொலியில் காலைச்செய்தி முடிந்ததும் அறிவிப்பாளர் கூறுகிறார்:

''இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். நேரம் ஏழு மணி நாற்பத்து இரண்டு நிமிடம்...''

உண்மையிலேயே அப்பொழுது நேரம், ஆறுமணி நாற்பத்து இரண்டு நிமிடங்களாகும்!

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்!

'ஊடுருவி'

# புனர்வாழ்வு புனரமைப்புக்கு கூடுதலான உதவிகளும் ஒத்துழைப்பும் கிடைக்கும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த காலத்தில் நிலவிய இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் இங்குள்ள உத்தியோகத்தர்கள் மிகுந்த சிரமப்பட்டு தமது கடமைகளைச் செய்துள்ளனர் என்பதை நான் இன்று கண்டுகொண்டேன். எனவே இப்பகுதியின் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கு கூடுதலான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி இப்பகுதியின் மேம்பாட்டுக்கு உதவுவோம்.

இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தற் குழுவின் மாநாடு மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநல அமைச்சின் செயலாளர் திரு. சரித்த தரத்வத்தை கூறினார்.

மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. எஸ்.கணேசநாதன் தலைமையில் நடைபெற்ற இம் மகா நாட்டில் அவர் தொடர்ந்து பேசியதாவது: இம்மகாநாட்டில் பங்குபற்றுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் இங்குபரிமாறப்படும் கருத்துக்களின் மூலம் வடகிழக்கு மாகாணத்துக்கு கூடுதலான நன்மை கிடைக்கும் என்று நம்புகிறேன்.

வடகிழக்கு மாகாண அரச அதிபர்கள், புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், பதில்செயலாளர்கள் ஆகியோருடன் புனர்வாழ்வு புனர்நிர்மாண சமுகநல அமைச்சின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ஒஸ்டின் பெர்னண்டோ, தேசிய வாழ்வு நெறிப்படுத்தற் குழுவின் இணைப்பாளர்களான திருவாளர்கள் கே. தயாபரன், ஏ. எஸ். சிவானந்தன், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பிரதிநிகள் ஆகியோர் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

அம்பாறை, திருமலை ஆகிய மாவட்ட அரசாங்கஅதிபர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

சுமார் 40 உயரதிகாரிகளும் 45 க்கும் மேற்பட்ட ஏனைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் மட்டக்களப்பில் உள்ள சிங்கள மக்களை மாநாட்டு மண்டபத்தில் தனிமையில் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது. (121)

## அகில இலங்கை சுற்றுலா

(பண்டத்தரிப்பு)

யாழ். லங்கா சித்த ஆயுள்வேத வைத்திய கல்லூரி மாணவர் மன்றம் அகில இலங்கை ரீதியிலான கல்விச் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. கல்லூரி உப அதிபரும், மாணவர் மன்றத்தின் காப்பாளருமான டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமையில் இம்மாதம் 14-ம் திகதியன்று புறப்பட்டு செல்லும் மாணவர் குழுவினர் சிசிரியா, கண்டி, விக்ரோறியா நீர்த்தேக்கம், ஹக்கல தாவரவியல் பூங்கா, கதிர்காமம், கொழும்பு நாவின்ன பண்டாரநாயக்கா ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் ஆகியன உட்பட மற்றும் பல இடங்களுக்கு சென்று திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## வலைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

''ஷப்று'' ஆதரவில் அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் வலைப்பந்தாட்டப்போட்டிகள் இம்மாதம் 23, 24ம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் 16ம் திகதி சனிக்கிழமைக்கு முன்நிலைய விளையாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் திரு. கே, சண்முகலிங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

## கல்முனை இராணுவ முகாமிலிருந்து
# புறப்பட்ட படையினர் முகாம் திரும்பவில்லையென தகவல்

(மட்டக்களப்பு)

கல்முனை இராணுவ முகாமிலிருந்து ட்ரக் ஒன்றில் புறப்பட்ட படையினர் இதுவரை முகாமுக்குதிரும்பவில்லையெனப் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன் தினம் காலை இந்த முகாமிலிருந்து 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினருடன் 'ட்ரக்' ஒன்று புறப்பட்டுச் சென்றதாகவும் அந்த ட்ரக் வண்டி ஆயுதபாணிகளால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுமுன் தினம் பரவலாக நடைபெற்ற தாக்குதலால் 12 இராணுவத்தினரும், 8 பொலிசாரும் கொல்லப்பட்டதாகவும் படையினர் தரப்பில் பலர் காயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் பலர் விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். பலரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## புலிகள்-ஹமீத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றம் குறித்து மீள் ஆய்வு செய்வதற்காகவும், தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் நோக்கத்துடனும் அமைச்சர் ஹமீதும், விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய தலைவர்களும் மீண்டும் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி, கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் மட்டக்களப்பு செல்லவுள்ளனர்.

மட்டுநகர் செல்லும் இக்குழுவினர் அங்குள்ள விடுதலைப் புலிகளின் இராணுவத் தளபதிகளுடனும், பாதுகாப்புப் படை அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்திப் பிரச்சனைக்குத் தீர்வு ஒன்றினை ஏற்படுத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுத பலத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சன் விஜயரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ''மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் பொலிஸ், இராணுவ முகாம்கள்மீது தாக்குதல்களை நடாத்தி பலரைக் கொன்றுள்ளனர். இச்செயல் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியதாகும். முன்னர் பெருமாள் எதனைச் செய்தாரோ அதனையே பிரபாகரனும் செய்துள்ளார். பெருமாளுக்கு நேர்ந்த கதிதான் பிரபாகரனுக்கும் ஏற்படும்.

''பொலிஸ் நிலையங்களை புலிகள் தாக்கி கைப்பற்றியுள்ளனர். நிலைமைகளை ஆராய்ந்து பொலிஸ் நிலையங்களை மீளக்கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(சி)


**நவ சனசமூக நிலையம்**

நடாத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு இல: 132
2-ம் பரிசு இல: 1321
3-ம் பரிசு இல: 10

நிர்வாகிகள்

நவ சனசமூக நிலையம்,
நவபுரம், கைதடி.

(சி-3984)


# மன்னாரில் ராணுவம் திரும்பிச் சென்றது

(மன்னார்)

மன்னார் தள்ளாடி முகாமில் இருந்து புறப்பட்ட இலங்கை ராணுவத்தினர் சங்கிலிப் பாலம் அருகே தடுத்து நிறுத்தப்பட்டு, முகாமுக்குத் திருப்பப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுப்பகல் நடந்தது.

குடிநீர் பெறுவதற்காக தள்ளாடி முகாமிலிருந்து மன்னாருக்கு ஒரு பவுஸரிலும், ஒரு ட்ரக்கிலும், ஒரு ஜீப்பிலும் வந்துகொண்டிருந்த ராணுவத்தினர் சங்கிலிப் பாலம் அருகே நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டு முகாமுக்குத் திரும்பிச் செல்லும்படி தெரிவிக்கப்பட்டதென்றும் இதனைத் தொடர்ந்து ராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர் என்றும் கூறப்பட்டது.

## வற்றுப்பளை சென்று
# திரும்பிய இளைஞரை யானை தூக்கி வீசியது!

(யாழ்ப்பாணம்)

வற்றுப்பளை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய இளைஞர் ஒருவர் யானையால் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்தார். அவர் பிரயாணம் செய்த சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளானது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் உடையார்கட்டு என்னுமிடத்தில் சைக்கிளில் வீடு நோக்கி வந்துகொண்டிருக்கையில் வீதியோரமாக நின்ற யானை இளைஞரைத் தூக்கி வீசியது. இதனால் இளைஞர் மரத்திலும், நிலத்திலும் மோதுண்டு படுகாயமடைந்தார்.

யாழ். கல்வியங்காட்டைச் சேர்ந்த திரு. க. செல்வராசா (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் நினைவு திரும்பாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(56)

## 16 புலிகள் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா படைகளுடன் நடைபெற்ற மோதல்களினால் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரமரணமடைந்தவர்கள் விபரம் வருமாறு:

செந்தில், மாசல், சௌந்தரம், கிருஷ்ணா, கீரோ, ரகீபன், தாசீவ், சிவா, கபூர், விமலநாதன், ரங்கரத்தினம் ஆகியோர் உட்பட 16 பேர் வீரமரணமடைந்தனர்.

## காங்கேசன் இரவு ரயில் ரத்து

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்ட இரவு மெயில் ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(153)

## மினிபஸ் விபத்தில் 10 பேர் காயம்

[யாழ்ப்பாணம்]

வற்றுப்பளை அம்மன் ஆலய பொங்கல் விழாவை முடித்துக்கொண்டு சுமார் 40 பிரயாணிகளுடன் வீடு திரும்பிய மினிபஸ் ஒன்று யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கலமாதா கோவிலருகே மதில் ஒன்றுடன் மோதுண்டு விபத்திற்குள்ளானதில் பத்துக்கு மேற்பட்ட பிரயாணிகள் காயமடைந்தனர். இதனால் மினிபஸ் பலத்த சேதமடைந்தது.

காயமடைந்தவர்களில் சுன்னாகத்தைச் சேர்ந்த கவிதா தர்மலிங்கம் (வயது 20) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் பலர் தனியார் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைபெற்றனர்.

[56]

# அரசினால் வளைந்துகொடுக்கமுடியுமே ஒழிய முதுகை ஒடித்துக்கொள்ள முடியாது

**- ரஞ்சன்**

(கொழும்பு)

'இந்த நாட்டில் சகலரையும், ஜனநாயகவழிக்கு கொண்டுவரும் நோக்கத்துடனேயே அரசாங்கம் வளைந்து கொடுத்து வருகிறது. அரசாங்கத்தினால் வளைந்து கொடுக்க முடியுமே ஒழிய முதுகை ஒடித்துக் கொள்ள முடியாது'.

பாராளுமன்றத்தில் நேற்று பதில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்க விடுத்த அறிக்கை ஒன்றுக்கு பெருந்தோட்டத்துறை அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் பதிலளித்து பேசுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது நீண்ட உரையில் தொடர்ந்து கூறியதாவது;

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நட்பு நிலவவில்லை.

மட்டக்களப்பில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து நான் எனக்குத் தெரிந்த வரையில் சபைமுன் எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

இங்கு நடந்துள்ள விடயம் விளையாட்டுக்குரியதல்ல இதில் யாரும் அரசியல் லாபம் தேடக்கூடாது.

மட்டக்களப்பு சம்பவம் குறித்து நேற்று மீளாய்வு செய்தோம். பொலிஸ் நிலையங்களை மீண்டும் செயற்படுத்த உறுதி பூண்டுள்ளோம்.

இது தமிழர்களுக்கு எதிரான போராட்டமல்ல. இது குற்றவாளிகளுக்கு எதிரான ஒருபோராட்டமாகும்.

## கிழக்கில் ஷெல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த பலர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினமும் நேற்றும் இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. பொம்மர். ஹெலிகள் இப்பகுதியில் பரவலாகத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இராணுவ முகாம்களிலிருந்து பல தடவைகள் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தொடர்ந்தும் இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக சேத விபரங்கள் பற்றிய செய்தி அச்சுக்குப் போகும் வரை எதுவும் தெரியவில்லை.

மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் அறுபதிற்குமதிகமான பொதுமக்கள் காய மடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐம்பது இராணுவத்தினர் இச்சம்பவங்களின்போது இறந்துள்ளதுடன் புலிகளின தரப்பில் 16 பேர் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவங்களின் போது காயமடைந்த அனைவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கல்முனையில் 40 பேர்பலி 100 பேர் காயம்

(மட்டக்களப்பு)

கல்முனையில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் 12 பேர் காயமடைந்துள்ளதுடன், ஆட்லறித் தாக்குதலினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் செல்வராணி (வயது 25), கஸ்ரோ (2 வயது), தர்மலிங்கம் (30 வயது) ஆகியோர் காயமடைந்துள்ளதுடன் கோபி (7 வயது), காந்தி ரேவதி (வயது 15), மகாதேவன் சந்திரன் (வயது 10), எஸ். ஜோர்ஜ், வி. மைக்கல் ஆகியோர் உட்பட மேலும் 40 பொதுமக்கள் இறந்ததாகவும், 100 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்ற மோதல்களுக்கு காரணம் என்று விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இங்குள்ள சிங்களப் பொலிஸார் நீண்டகாலமாக அத்துமீறல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த பொழுது பல சந்தர்ப்பங்களில் புலிகள் தலையிட்டு சமாதானம் செய்துள்ளார்கள்.

அத்துடன் இங்கிருந்த சிங்களப் பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப் பட்டிருந்தும் பின்னர் படிப்படியாக வாபஸ் பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோல இங்குள்ள இராணுவத்தினரும் பலதடவைகள் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளார்கள் இதனாலே இச்சண்டைகள் நடைபெற்றன'' என்றும் அவர் கூறினார்.

## தொலைச்சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு தொலைபேசிச் சேவையும் நேற்று நண்பகலுடன் இயங்கவில்லை.

## சகல மோதல்களையும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் (யோகி), திரு. சுப்பிரமணியம், திருமதி பாலசிங்கம், மகளிர் முன்னணித் தலைவி மாலினி, அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. டொமினிக் ஆகியோர் கலந்து கொண்டனர். (152-அ)

## கும்புறுமூலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பிலும் சிலர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இங்குள்ள காடுகளில் தொடர்ந்தும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் கேட்டவண்ணமும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்குப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது அம்பாறை பொலிஸ் நிலையத்தையும் கைப்பற்றவுள்ளனர்''.

பாராளுமன்றத்தின் பதில் எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினருமான திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்று சபையில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''அரசாங்கம் எதனையும் திட்டமிட்டுச் செயற்படாத காரணத்தாலேயே இவை நடந்துள்ளன'' என்றார்.

[அ]

## சிங்களவர்களைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து பதினைந்து சிங்களவர்களைக் காணவில்லை எனத் தெரியவருகிறது.

## ஜெயலலிதா வழக்கு:
# மனு தள்ளுபடி

(சென்னை)

அ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் வெற்றியை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதி மன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

## பஸ் சேவைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை நடைபெறும் பட்சத்திலேயே யாழ் - மட்டக்களப்பு சேவை இன்று சாத்தியமாகும் என்று இ. போ. ச. வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

நிலைமை இன்று சுமுகமாகும் பட்சத்தில் பஸ்சேவை நாளை முதல் வழமையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமான கட்டளையை ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசா பிறப்பித்துள்ளதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மாகாண இணைப்புத் தொடர்பான வாக்கெடுப்பு நடத்துவதற்கு 1990ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி ஏற்கனவே நிர்ணயித்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.